

# விதிகள் மற்றும் நிபந்தனைகள்

## வாடிக்கையாளர் 11 மாதங்கள் முன்தொகையை செலுத்திய பிறகு முழுப் பலன்களுடன் நகைகளை பெற்றுக் கொள்ளலாம்

1) நகைகளை வாங்குவதற்கான முன்பணம் செலுத்தி முன்பதிவு செய்ய குறைந்தபட்சம் 10000/- ரூபாயைச் செலுத்த வேண்டும் அதிகபட்ச தொகைக்கு வரம்பில்லை. இந்த தொகை எந்த சூழலிலும் திருப்பி வழங்கப்படாது.

2) வாடிக்கையாளர் பணத்தை செலுத்திய தேதியன்று அல்லது நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு பணம் வந்தடைந்த தேதியில் நிலவும் தங்கத்தின் விலையின் அடிப்படையில் தங்கத்தின் எடைக்கு ஏற்றவாறு (22 கேரட் எனும் அடிப்படையில்) வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

3) முன்பணம் செலுத்த தொடங்கி 11 மாதங்கள் நிறைவடைந்த பிறகு வாடிக்கையாளர்கள் அவர்களுக்கு விருப்பமான நகையை தேர்வு செய்து வாங்கிக் கொள்ளலாம், தங்க நாணயங்கள் உட்பட தங்களுடைய கணக்கில் முன்பதிவு செய்யப்பட்ட தங்க எடைக்கு 18% வரை மதிப்பு கூட்டு வரி எதுவும் இருக்காது. நகைகளில் பதிக்கப்படும் கற்களுக்கான கூடுதல் தொகை வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படும்.

4) கீழ்வரும் வழிகளில் முன்பதிவிற்கான தொகையை செலுத்தலாம் பழைய தங்கத்தை கொடுத்து மாற்றுவதன் மூலம் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, NEFT அல்லது RTGS மற்றும் UPI மூலமோ அல்லது Khazana Jewellery Pvt. Ltd.," என்ற பெயரில் வங்கிப் பரிவர்த்தனையும் மூலமாக செலுத்தலாம்.

5) வங்கி கட்டணங்கள் அனைத்தையும் வாடிக்கையாளரே செலுத்த வேண்டும்.

6) வாடிக்கையாளர்கள் முன் தொகையை செலுத்தும் பொழுது தொகைக்கான அசல் ரசீதை பெறுவார்கள்.

7) வாடிக்கையாளர்கள் நகையை பெறும் போது முன்பணம் செலுத்தியதற்காக வழங்கிய ரசீதை திருப்பி அளிக்க வேண்டும்.

8) இது முன்பணம் மற்றும் தங்கத்தின் எடையின் அடிப்படையில் தங்க நகைகளை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் ஆகும்.

9) தங்க நகைகளை வாங்குவதற்கான இந்த முன்பணம் வேறு எந்தத் திட்டம் அல்லது சலுகைகளுடனும் தொடர்புடையது அல்ல.

10) முன்பணத் தொகைக்கென எந்த வட்டியும் வழங்கப்படாது.

11) வாடிக்கையாளர் முன்பணத்தை செலுத்திய தேதியிலிருந்து 11 மாதங்களுக்குப் பிறகு அல்லது 360 நாட்களுக்குள் நகைகளை பெற்றுக் கொள்ளலாம். எந்த ஒரு சூழ்நிலையிலும் பணமாக திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

12) வாடிக்கையாளர் தேர்ந்தெடுத்த நகையினை இந்தியாவில் உள்ள எந்த கஜானா ஜுவல்லரி ஷோரூமில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்

# விதிகள் மற்றும் நிபந்தனைகள்

13) வாடிக்கையாளர் 360 நாட்களுக்குள் தாங்கள் செலுத்திய முன்பணத்திற்கு ஈடான நகையை பெறாவிட்டால் பொருந்தக்கூடிய GST விகிதத்துடன் வாடிக்கையாளரின் பெயரில் சேல்ஸ் இன்வாய்ஸை உருவாக்கி நிறுவனத்திடமிருந்து வாடிக்கையாளர் அதை பெற்று கொள்ளும் வரை நிறுவனமே அதை வைத்திருக்க அங்கீகாரம் அளிக்கிறார்.

14) முன்பணம் செலுத்துவதை முன்கூட்டியே நிறுத்த விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு விலகும் போதான விதிகளின் அடிப்படையில் பலன்களை பெறுவார்கள்.

15) முன்பணத் தொகையை விட அதிக மதிப்புள்ள தங்க நகைகளை வாங்கும் வாடிக்கையாளர்கள், சேதாரம், (மதிப்புக் கூட்டல்) கூடுதலான எடை ஆகியவற்றிற்கான தொகையைச் செலுத்த வேண்டும்.

16) தங்க நகையை வாங்கி முடித்த பிறகு ஏதேனும் தொகை மீதம் இருந்தால் அது பணமாக வழங்கப்படாது. அதற்கு பதிலாக அத்தொகை தங்க நகையின் எடை மீது அல்லது தங்க நாணயத்தின் மீது ஈடுசெய்யப்படும்.

17) முகவரியில் அல்லது மொபைல் எண்ணில் ஏதேனும் மாற்றம் இருந்தால் அல்லது ரசீது தொலைந்து விட்டால், வாடிக்கையாளர் பொருத்தமான KYC விவரங்களை வழங்கி நிறுவனத்திடம் தெரிவிக்க வேண்டும்.

18) வாடிக்கையாளர் தனக்கான நாமினியை முன்மொழியும் போது தன்னுடைய மற்றும் தனது நாமினியுடைய KYC விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும். நாமினி மைனராக இருந்தால் கார்டியன் கையெழுத்திட வேண்டும்.

19) பில்லிங்கின் போது அல்லது டெலிவரியின் பொழுது GST மற்றும் பிற அனைத்து அரசாங்க வரிகளையும் வாடிக்கையாளரே செலுத்த வேண்டும்.

20) பில்லிங்கின் போது அல்லது டெலிவரியின் போது வாடிக்கையாளரின் கையொப்பம் "ID" மற்றும் முகவரி சான்று சரிபார்க்கப்படும்.

21) நிறுவனம் அதன் சொந்த விருப்பத்தின் பெயரில் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் அவ்வப்போது திருத்தலாம், சரி செய்யலாம், மாற்றலாம், சேர்க்கலாம் அல்லது நீக்கலாம்.

22) அனைத்து மறுப்புகளும் சென்னையில் உள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது.

# விலகும் போதான நன்மைகள்

| விலகும் நாள் | (VA) மதிப்புக் கூட்டு பலன்கள் |
|---|---|
| 331 நாட்களிலிருந்து | 18% வரை |
| 303 - 330 நாட்கள் | 10% வரை |
| 241 - 302 நாட்கள் | 9% வரை |
| 181 - 240 நாட்கள் | 7% வரை |
| 180 நாட்களுக்கும் குறைவாக | எந்த பலன்களும் இல்லை |

KHAZANA JEWELLERY

www.khazanajewellery.com

சென்னை - தி.நகர்: 044-24364501 | கதீட்ரல் ரோடு: 044-28117046 | அண்ணாநகர்: 044-42631900 | வேளச்சேரி: 044-42163900 • கோயம்புத்தூர்: 0422-4213900 • சேலம்: 0427-4265900 • புதுச்சேரி: 0413-4209900 • திருநெல்வேலி: 0462-4210900 பெங்களூரு - ஜெயநகர்: 080-41539900 | மாரத்தஹள்ளி: 080-25400009 • பெல்லாரி: 08392-271600 • விசாகப்பட்டினம் - துவாரகா நகர் 1: 0891-6668900 | துவாரகா நகர் 2: 0891-6672900 | காஜுவாகா: 0891-2573900 • விஜயவாடா: 0866-6643900 • குண்டூர்: 0863-6633900 • காக்கிநாடா: 0884-6661900 • ராஜமுந்திரி: 0883-6656900 • பீமாவரம்: 08816-239901 • திருப்பதி: 0877-6644900 • நெல்லூர்: 0861-2354900 • ஸ்ரீகாகுளம்: 08942-228901 • ஓங்கோல்: 08592-227001 • அனந்தபூர்: 08554-220900 விஜயநகரம்: 08922-252900 • கடப்பா: 08562-244456 • கர்னூல்: 08518-221900 • அமலாபுரம்: 08856-236900 • அனகாபல்லி: 08924-222900 • கோபாலப்பட்டினம்: 0891-2526900 • துனி: 08854-255900 • ஹைதராபாத் சோமாஜிகுடா: 040-66639900 | குகட்பல்லி: 040-40204900 | A.S ராவ் நகர்: 040-24889900 | தில்சுக்நகர்: 040-66461900 | சந்தநகர்: 040-23038900 • கம்மம்: 08742-226900 • பெர்ஹாம்பூர்: 0680-2250901 (அனைத்து நாட்களிலும் திறந்திருக்கும்).

Follow us on



உங்கள் கனவு நகைகளை
வாங்குவது தற்போது கஜானா
மூலம் நினைவாகட்டும்

KHAZANA JEWELLERY

# கோல்டன் ட்ரீம்ஸ்

முன்பணம் செலுத்தி முன்பதிவு செய்தல் திட்டம்

## இப்போதே முன்பதிவு செய்யுங்கள்

உங்களுக்கு மிகவும் பிடித்தமான
தங்க நகைகளை வாங்குங்கள்

கஜானா ஜூவெல்லரியில் முன்பணம் செலுத்தி, நகையை முன்பதிவு செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம் இது உங்கள் கனவு நகையை பெறுவதற்கான ஸ்மார்ட்டான, பாதுகாப்பான, வசதியான தேர்வாகும். திருமணங்கள் மற்றும் சுபமங்கள நிகழ்வுகள் போன்ற விசேஷ நிகழ்வுகளுக்கு, முழுத் தொகையையும் முன்பதிவின் போதே செலுத்தி விலையை நிர்ணயம் செய்து, தங்கத்தின் விலை ஏற்றத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் உங்களுக்குப் பிடித்த நகைகளை வாங்குங்கள். நிலையான, பாதுகாப்பான விலையில் தங்கம் வாங்க இன்றே பதிவுசெய்யுங்கள். 11 மாதங்களுக்குப் பிறகு, 18% வரையிலும் எந்த மதிப்புக் கூட்டல் கட்டணமும் இல்லாமல் உங்கள் நகைகளை வாங்குங்கள்.



## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)

**முன்பணம் செலுத்தி, நகையை முன்பதிவு செய்தல் என்றால் என்ன?**

முன்பணம் செலுத்தி முன்பதிவு செய்யும் திட்டமானது, விலை ஏற்ற இறக்கத்தைப் பற்றி கவலைப்படாமல் தங்கத்தை வாங்க உதவுகிறது. இந்த திட்டத்தின் மூலம், பணம் செலுத்திய நாளில் அன்றைய விலைக்கு தங்கத்தின் மீது வரவு வைத்து, 11 மாதங்களுக்கு பிறகு அதே விலையில் தங்கத்தைப் பெறலாம், இதற்கு 18% வரை VA (மதிப்புக் கூட்டல்) இருக்காது.

**முன்பணத்தை எவ்வாறு செலுத்தலாம்?**

பழைய தங்கத்தை கொடுத்து மாற்றுவதன் மூலம் கிரெடிட் கார்டு மூலம் டெபிட் கார்டு மூலம் NEFT அல்லது RTGS மூலம் UPI மூலம் அல்லது "Khazana Jewellery Pvt. Ltd.," என்ற பெயரில் வங்கிப் பரிவர்த்தனை செய்வதன் மூலமாகவும் முன்பதிவு செய்யலாம்.

**இந்த திட்டத்தின் மூலம் நான் எப்போது நகையைப் பெறலாம்?**

நீங்கள் முன்பணத்தை செலுத்திய தேதியிலிருந்து 11 மாதங்களுக்குப் பிறகு அல்லது 360 நாட்களுக்குள் நகைகளை பெற்றுக் கொள்ளலாம். முன்பணம் செலுத்திய தேதியிலிருந்து 360 நாட்களுக்குள் நகையை பெறவிட்டால் எந்த ஒரு சூழ்நிலையிலும் பணமாக திருப்பி அளிக்கப்படமாட்டாது.

**360 நாட்களுக்குள் நான் தங்க நகைகளை வாங்கவில்லை என்றால் என்ன ஆகும்?**

நீங்கள் முன்பணம் செலுத்திய நாளிலிருந்து 360 நாட்களுக்குள் அத்தொகைக்கு ஈடான நகையை பெறாவிட்டால், பொருந்தக்கூடிய GST விகிதத்துடன் உங்களின் பெயரில் சேல்ஸ் இன்வாய்ஸை உருவாக்கி நிறுவனத்திடமிருந்து நீங்கள் அதை பெற்று கொள்ளும் வரை நிறுவனமே அதை வைத்திருக்க அங்கீகாரம் அளிப்பீர்கள்.

**நான் முன்கூட்டியே விலகினால் என்ன செய்ய வேண்டும்?**

முன்பணம் செலுத்திய தேதியிலிருந்து 180 நாட்களுக்குள் முன்கூட்டியே இந்த திட்டத்திலிருந்து விலகினால், சேதாரத்திலிருந்து (VA) உங்களுக்கு எந்த தள்ளுபடியும் அளிக்கப்படாது. இருப்பினும், 180 நாட்களுக்குப் பிறகு ஆனால் 330 நாட்களுக்கு முன்பு முன்பணம் செலுத்தலை நிறுத்தினால், விலகல் பலன்கள் விதியின்படி சேதாரம் (VA) மீதான நன்மைக்கான தள்ளுபடிக்கு தகுதி பெறுவீர்கள்.

**GST பிடித்தம் செய்யப்படுமா?**

ஆம், பில்லிங்கின் போது GST வரியையும் மற்ற அரசு வரிகளையும் நீங்களே செலுத்த வேண்டி இருக்கும்

**முன்பணம் செலுத்திய தொகையை காட்டிலும் அதிக தொகைக்கு நகை வாங்கினால் என்ன செய்ய வேண்டும்**

முன்பணம் செலுத்தி முன்பதிவு செய்த எடையை காட்டிலும் அதிக எடைக்கு நகையை வாங்கினால், பொருந்தும்பட்சத்தில் கூடுதலான தங்கத்தின் எடைக்கு (VA) நீங்கள் சேதாரம் செலுத்த வேண்டி இருக்கும்

**நான் தங்க நாணயங்களை வாங்கிக் கொள்ளலாமா?**

நிச்சயமாக, நீங்கள் தங்க நாணயங்களை சேதாரம் (VA) மற்றும் செய்கூலியின்றி வாங்கலாம்.

**பணத்தை திரும்பப் பெற முடியுமா?**

அரசு விதிமுறைகளின்படி, எந்த சூழ்நிலையிலும் பணமாகத் திருப்பி அளிக்கப்படாது.

**இந்தத் திட்டத்தில் சேர்வதற்கான குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொகை எவ்வளவு?**

குறைந்தபட்சத் தொகை ₹10000/- ஆகும். அதிகபட்ச தொகைக்கு எந்த கட்டுப்பாடும் இல்லை. இருப்பினும், ₹2 லட்சத்துக்கும் அதிகமான தொகையைப் பெறும் போது அரசாங்க விதிமுறைகளின்படி, வாடிக்கையாளரிடமிருந்து PAN விவரங்கள் சேகரிக்கப்படும்.

**தங்க நகைகளைத் தவிர வேறு எதையேனும் வாங்க முடியுமா?**

முடியாது, தங்க நாணயங்கள் உட்பட தங்க நகைகளை மட்டுமே வாங்க முடியும். வைரம்/பிளாட்டினம்/வெள்ளி பொருட்களை வாங்குவதற்கு இந்தத் திட்டம் பொருந்தாது.

**இதை வேறு ஏதேனும் சலுகைகளுடன் இணைத்துக் கொள்ளலாமா?**

முடியாது. இது ஒரு தனித்துவமான திட்டமாகும். இதை வேறு எந்த ஒரு திட்டம்/ஆஃபர்களுடனும் இணைக்க முடியாது.

**தங்க நகைகளை எந்த கஜானா ஜுவல்லரி ஷோரூமில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாமா?**

ஆம், நீங்கள் தேர்ந்தெடுத்த நகையினை இந்தியாவில் உள்ள எந்த கஜானா ஜுவல்லரி ஷோரூமில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

